**தலைப்பு 293 – இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 293 - இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 யூலை 03 ஆம் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டனவாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தீயோகத்தரினதும் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

### (அ) மொத்த நிதி ஏற்பாடும் செலவும்

திணைக்களத்திற்காக ஒதுக்கப்பட்ட மொத்தத் தேறிய நிதி ஏற்பாடு ரூபா 1,384.80 மில்லியனாக இருந்ததுடன், அதில் மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 1,074.55 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 310.25 மில்லியன் அதாவது 22.40 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 315.30 | 298.87 | 16.43 | 5.21 |
| மூலதனம் | 1,069.50 | 775.68 | 293.82 | 27.47 |
| மொத்தம் | 1,384.80 | 1,074.55 | 310.25 | 22.40 |

### 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

#### பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்

திணைக்களத்திற்குரிய 29301 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ள படியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 19.00 | 17.76 | 11.00 | 16.88 | 60.00 | 37.76 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

திணைக்களத்தின் கீழுள்ள 7002/0000/00/0300/0016/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 6.70 மில்லியனாக இருந்தது.

## 2.4 பொது வைப்புக் கணக்கு

திணைக்களத்தின் கீழுள்ள 05 பொது வைப்புக் கணக்குகளுக்குரிய 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 6.62 மில்லியனாக இருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா. மில்லியன் |
| 6000/0000/00/0001/0105/000 | 0.06 |
| 6000/0000/00/0002/0145/000 | 0.51 |
| 6000/0000/00/0013/0100/000 | 1.91 |
| 6000/0000/00/0016/0091/000 | 3.95 |
| 6000/0000/00/0018/0095/000 | 0.19 |
| மொத்தம் | 6.62 |

## 2.5 கணக்காய்வு அவதானிப்பு

இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

திணைக்களத்தினால் கீழே காண்பிக்கப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புகள் |
|---|---|---|---|
| (அ) | கணனி, உபபாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நாளது வைரயாக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | கடமைத் தொலைபேசிப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 845(1) | பூரணமற்ற வகையில் பேணப்பட்டிருந்தது. |
| (இ) | வாகனப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 1647 | பேணப்பட்டிருக்கவில்லை. |

### 3.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று – விடய இலக்கம் 29301

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 747,319 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை மீதிகள் 01 வருடம் முதல் 05 வருடங்கள் வரையிலான காலவீச்சிலிருந்து நிலுவை மீதியாகக் காணப்பட்டது. இந்த நிலுவை மீதியில் திணைக்களத்திலிருந்து வெளியே இடமாற்றலாகிச் சென்ற 12 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 112,770 கூட்டுத்தொகையான மீதியும், வேலை நீக்கஞ் செய்யப்பட்ட, மரணமடைந்த மற்றும் ஓய்வுபெற்றுச் சென்ற 06 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 107,010 கூட்டுத்தொகையான மீதியும் காணப்பட்டன.

**3.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம், திணைக்களத்தால் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2016 ஆம் ஆண்டிற்குரிய அவ்வறிக்கை 2017 யூன் 27 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

ரூபா 550,000 பெறுமதியான லொறி வண்டி மற்றும் ரூபா 400,000 பெறுமதியான ஜீப் வண்டி என்பன 1-5 வருடங்களுக்கிடையிலான காலம் விளைவற்றுக் காணப்பட்டது.

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

2016 இன் பொருள் மெய்மையாய்வு மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட உத்தியோகபூர்வ இல்லங்களின் பொருள் பற்றாக்குறை மற்றும் மிகை தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்தல்**

பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சிற்குச் சொந்தமான ரூபா 10,350,000 கூட்டுப்பெறுமதியான மூன்று வாகனங்கள் திணைக்களத்திற்கு கையேற்கப்படாமல் ஆண்டொன்றிற்கு மேற்பட்ட காலமாக பயன்படுத்தப்பட்டிருந்தது.

**3.5 செயலாற்றல்**

----------------------------

2016 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டினதும் செயல்நடவடிக்கைத் திட்டத்தினதும் பிரகாரம் திணைக்களத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) சிறு தோட்ட இறப்பர் மற்றும் பெருந்தோட்ட பிரிவில் இறப்பர் மீள்பயிரிடுகை மற்றும் புதிய பயிர்ச்செய்கைக்காக எதிர்பார்க்கப்பட்ட காணியின் அளவு 7,000 ஹெக்டேயராக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், இறப்பர் விலை குறைவடைந்தமையினால் இறப்பர் பயிரிடல் 1,183 ஹெக்டேயருக்கு வரையறுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், மதிப்பீடு செய்யப்பட்ட நில அளவில் 17 சதவீத அளவு மற்றும் இறப்பர் புதிதாக பயிரிடல் மற்றும் மீள் பயிரிடல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) பாரம்பரிய மற்றும் பாரம்பரியமில்லாத இறப்பர் பயிர் செய்யும் பிரதேசங்களில் 830 ஹெக்டேயர்களில் உப பயிர்ச் செய்கைக்காக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், உப பயிர்ச்செய்கை செய்தல் 139 ஹெக்டேயருக்கு வரையறுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், மதிப்பீடு செய்யப்பட்ட நில அளவில் 17 சதவீதத்தில் மாத்திரம் உப பயிர்ச்செய்கை செய்யப்பட்டிருந்தது.

(இ) பெருந்தோட்டக் கம்பனிக்கும் சிறு தோட்ட இறப்பர் உரிமையாளர்களுக்கும் 4000 ஹெக்டேயர் காணிக்காக மழை மேவுகை விநியோகிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் அதனிடையே 3000 ஹெக்டேயருக்கு அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டு அதில் 2635 ஹெக்டேயருக்கு மழை மேவுகை பயன்படுத்துவதற்காக மானியம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் மழை மேவுகை மானியம் வழங்குவதற்கு முடியாதிருந்த அளவு 34 சதவீதமாக இருந்தது.

(ஈ) மொனராகலை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் இறப்பர் கன்றுகளை நாட்டும் எதிர்பார்ப்பில் 5 இலட்சம் இறப்பர் கன்றுகளை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், பின்னர் அந்த அளவு 88,170 கன்றுகளாக இருந்தது. அதன் பிரகாரம், வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்ட இறப்பர் கன்றுகளின் அளவில் 82 சதவீதம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

## 3.6 வங்கிக் கணக்கு செயற்பாடுகளில் குறைபாடு

2016 திசெம்பர் மாதத்திற்காக திணைக்களத்தால் தயாரிக்கப்பட்டிருந்த வங்கி கணக்கிணக்கக் கூற்றில் 06 மாதங்கள் முதல் 01 வருடங்களுக்கிடையிலான காலவீச்சினை விஞ்சியிருந்தபோதும், கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத காசோலைகளின் பெறுமதி ரூபா 109,687 ஆகும்.

## 3.7 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மையிலானதாக இருந்தன. தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டதன் பிரகாரம், 2015 ஆம் ஆண்டின் பாதீட்டு முன்மொழிவின் படி 2014 ஒக்தோபர் 15 ஆந் திகதி முதல் 2015 செப்தெம்பர் 30 வரை 05 முறைகளின் கீழ் சிறு தோட்ட இறப்பர் உரிமையாளர்களிடமிருந்து இறப்பரைக் கொள்வனவு செய்யும் அடிப்படையில் உத்தரவாத விலையொன்றைச் செலுத்துவதற்கு முன்மொழியப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், 2015 ஆம் ஆண்டில் ரூபா 2,049 மில்லியன் உத்தரவாத விலையொன்று திணைக்களத்தால் செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காணப்படுகின்றன.

(அ) 2014 திசெம்பர் 24 முதல் 2015 பெப்ரவரி 10 வரையான இரண்டாவது முறையின் பிரகாரம் இறப்பர் வியாபாரிகள் ஆரம்ப வழங்குனரிடமிருந்து கொள்வனவு செய்த இருப்புக்கள் உத்தரவாத விலைக்கு விற்பனை செய்ய முடியாதிருந்த சந்தர்ப்பங்களில் உத்தரவாத விலை வேறுபாடுகள் அவர்களுக்கு செலுத்தப்பட்டமையை பரீட்சிக்கும் போது இறப்பர் கிலோகிராம் 8100 இற்காக கிலோகிராம் ஒன்றிற்கு ரூபா 10 வீதம் இலாபத்துடன் உத்தரவாத விலை வேறுபாடு ரூபா 445,500 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) இரண்டாவது முறையின் கீழ் வியாபாரி மூவருக்குச் செலுத்தப்பட்ட ரூபா 16,380,661 தொகையிலிருந்து பிழையான தகவல்களை அடிப்படையாகக் கொண்டு செலுத்தப்பட்டிருந்த ரூபா 2,009,817 தொகை மீள அறவிடப்படவேண்டியிருந்த போதிலும், அவ்வாறு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) உத்தரவாத விலை செலுத்தும் முதலாவது முறையின் போது (2014 நவம்பர் 15 முதல் 2014 திசெம்பர் 23 வரை) உத்தரவாத விலைக்கும் இறப்பர் சந்தை

விலைக்கும் இடையேயான வேறுபாடு நேரடியாக விவசாயிகளுக்குச் செலுத்தப்பட்டிருந்தது. இரண்டாவது முறைமையின் போது இறுதி உற்பத்தியாளர் உத்தரவாத விலை செலுத்தி கொள்வனவு செய்த இறப்பர் அளவின் அடிப்படையில் உற்பத்தியாளருக்குச் செலுத்தப்பட்டிருந்தது. உத்தரவாத விலை அமுல்படுத்தப்பட்ட திகதியில் உள்ளவாறு மற்றும் முதலாவது முறைமையிலிருந்து இரண்டாவது முறைமைக்கு மாறுகின்ற போது அனுமதிப்பத்திரங்கள் சகல இறப்பர் கொள்வனவு செய்யும் நிறுவனங்களிலும், 2014 நவம்பர் 15 இல் உள்ளவாறு மற்றும் 2015 திசெம்பர் 20 இல் உள்ளவாறு காணப்பட்ட இருப்பின் கணிப்பீடு மற்றும் முறையான பதிவேடு என்பன பேணப்படாதிருந்தமையால் பரிசோதனைக்குள்ளாக்கப்பட்ட தனியார் முகவர் நிறுவனமொன்று உரிய கால எல்லையில் கொள்வனவு செய்த மற்றும் விற்பனை செய்த இறப்பர் அளவினை ஒப்பீடு செய்த போது கொள்வனவு செய்யப்பட்ட அளவினை விட 46,329 கிலோகிராம் விற்பனை செய்யப்பட்டமையால் அந்த இறப்பரின் அளவு விவசாயிகளின் உத்தரவாத விலை செலுத்தாமல் குறைந்த விலையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தமையும் (முதலாவது முறைமையின் கீழ்) அதன்படி ஒரு இறப்பர் அளவில் இரண்டு தடவை அரசாங்கத்திற்கு உத்தரவாத விலை செலுத்தவேண்டியும் ஏற்பட்டிருந்தது.

(ஈ) 2015 யூலை 01 முதல் 2015 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரை ஐந்தாவது முறைமையின் கீழ் உத்தரவாத விலை செலுத்துதலை பரீட்சித்த போது மூன்று வியாபார நிறுவனங்களின் (RC 14 அறிக்கையின் மூலம்) சிறுதோட்ட இறப்பர் உரிமையாளர்களிடமிருந்து மேற்கொள்ளப்பட்டது என 2015.06.30 ஆந் திகதிய 2015/02 ஆம் இலக்க திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம், உறுதிப்படுத்தப்படாமல் இறப்பர் கிலோகிராம் 77,459 இற்காக ரூபா 7,443,769 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 3.8 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக இருந்தன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் நடைமுறைகளுக்குப் புறம்பானவைகள்

---

(i) பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 7.11.1 இன் பிரகாரம், கேள்வி மதிப்பீட்டு அறிக்கையுடன் தொழில்நுட்ப மாதிரியொன்றிலிருந்து பிரதான நிதி ஏற்பாடுகளுக்கு கேள்விதாரர்களின் இணக்கப்பாட்டை தெரிவிக்கின்ற அட்டவணையொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், ரூபா 9,834,717 பெறுமதியான அலுவலக உபகரணங்களைக் கொள்வனவு செய்யும் போது அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) இறப்பர் அபிவிருத்தி உத்தியோகத்தருக்காக ரூபா 9,834,717 தொகையான அலுவலக உபகரணங்களைக் கொள்வனவு செய்யும்போது உரிய நிறுவனத்தினால் 21 நாட்களுக்குள் பொருள் வழங்கல் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தமை பெறுகைகள் ஆவணங்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், குறித்த கால எல்லையை விஞ்சி 60 நாட் தாமதத்துடன் பொருட்கள் வழங்கப்பட்டிருந்தது.

## 3.9 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பதியத்தலாவ நாற்று மேடைக்காக எல்லை வேலி நிர்மாணித்தல் ரூபா 1,389,400 ஒப்பந்தத் தொகை சரியாக எல்லைத் தூண் நடப்படாமையினாலும் எல்லைத் தூண்களை யானைகள் புகுந்து உடைத்திருத்தமையாலும் ரூபா 1,121,107 தொகையான செலவினம் பயனற்ற செலவினத்திற்குட்பட்டிருந்தது.

## 3.10 முகாமைத்துவ நலிவுகள்

மொனராகலை, அம்பாறை பிரதேசங்கள் மற்றும் இறப்பர் ஆராய்ச்சி நிறுவனம் என்பவற்றிற்கு 351,595 இறப்பர் கன்றுகளை கொண்டு செல்வதற்காக திணைக்களத்திற்குச் சொந்தமான லொறி வண்டி பயன்படுத்தப்படாமல் தனியார் லொறி வண்டி பயன்படுத்தப்பட்டமையின் காரணமாக கூட்டுமொத்தமாக ரூபா 13,213,595 தொகை தனியார் நிறுவனத்திற்குச் செலுத்தவேண்டி ஏற்பட்டிருந்தது.

## 3.11 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு.

| | பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 30 | 25 | 05 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 16 | 03 | 13 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 364 | 318 | 56 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 72 | 67 | 05 | - |
| (v) | ஏனையவை (அமைய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை)* | - | 10 | - | 10 |
| | **மொத்தம்** | **482** | **423** | **79** | **10** |

* தேயிலை சக்தி நிதியத்தில் சேவையாற்றிய முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர்களில் பத்துப் பேர் 2016 ஒக்தோபர் 01 ஆந் திகதி முதல் திணைக்களத்திற்கு நியமிக்கப்பட்டிருந்ததுடன் அந்த உத்தியோகத்தர்கள் முறையானதாக நிறுவனத்திற்கு சேர்க்கப்பட்டிருக்கவில்லை.